கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், நேற்று (04.06.2025) சென்னை, பல்லவன் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறையின் மூலம் வழங்கப்படும் பல்வேறு சேவைகளை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் முதற்கட்டமாக விளம்பரப்படுத்தப்பட்ட மாநகர் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, , கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.க.நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப.அம்ரித், கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் முனைவர் க.சொ.இரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பேருந்து நிறுத்த நிழற்குடைகள் மற்றும்

ஆட்டோக்களிலும் கூட்டுறவின் சேவைகள் விளம்பரப்படுத்தப்படும்!

திட்டத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேட்டி!

சென்னை,ஜூன்.5-

"பேருந்து நிறுத்த நிழற்குடை மற்றும் ஆட்டோக்களிலும் கூட்டுறவின் சேவைகள் விளம்பரப்படுத்தப்படும்" என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தள்ளார்.

கூட்டுறவின் சேவைகளை மாநகரப் பேருந்துகளில் விளம்பரப் படுத்துதல் நிகழ்வின் போது அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது

தமிழ்நாட்டின் முதலமைச்சராக முதல்வர் அண்ணன் தளபதி பொறுப்பேற்று 4 ஆண்டுகளில் அனைத்து துறைகளும் மகத்தான சாதனைகளை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செய்து 4 ஆண்டுகளில் இந்தியாவில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக எல்லோர்க்கும் எல்லாம் என்கின்ற தத்துவத்தை நிலைநிறுத்துகின்ற வகையில் மாநிலத்தின் அனைத்து பகுதிகளும், அனைத்து திறப்பு மக்களும், அனைத்து துறைகளும், சீரான வளர்ச்சியை முன்னேற்றத்தை முதலமைச்சர் தலைமையில் சாதித்து இருக்கிறார்.

இன்று அனைத்து மக்களும் அரசியல் அப்பாற்பட்டவர்களும், பொதுமக்கள் விரும்புகின்ற இந்த 4 ஆண்டு ஆட்சி மட்டும் அல்ல இனிவரும் காலங்களிலும் இவர் தலைமையிலான இந்த "நல்லரசு" தொடரவேண்டும் என்று மக்கள் விரும்புகின்ற சூழ்நிலையே இன்றைக்கு உள்ளது.

பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் வளர்ச்சி ஒட்டுமொத்த மாநிலங்களின் வளர்ச்சியை உயர்த்தி இருக்கின்ற கூட்டுறவுத்துறை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி சிறப்பான பல சாதனைகளை செய்துவருகின்றது என்றால் அது மிகையாகாது.

இத்துறையானது "யானை பலம் கொண்ட ஒரு துறை" என அனைவரும் அறிந்த ஒன்றுதான். நீண்ட வரலாறு கொண்ட ஒரு அமைப்புதான் இந்த கூட்டுறவு.

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற அந்த பொன்மொழியும் இன்று மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் இந்தியாவில் வேறு எங்கும் கூட்டுறவு சங்கங்கள் உருவாவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் தான் தற்போது இந்தியாவில் முதல் கூட்டுறவு சங்கம் 1904ல் திருவள்ளுவர் மாவட்டத்தில் "திரூர்" என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் கூட்டுறவுத்துறை, தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது பெருமைக்குரியதாகும்.

கிராமபுற மக்கள் தொடங்கி நகர்புற மக்கள் வரையிலும், நேரடியாக சந்திக்கின்ற ஒரு துறை என்றால் அது கூட்டுறவுத்துறையே. தமிழகத்தில் இரண்டு கோடியே இருபது லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. இந்த குடும்பங்களை நேரடியாக தொடர்பு கொள்கின்ற ஒரு துறை என்றால் அது கூட்டுறவுத்துறை ஆகும். அரசு அறிவிக்கின்ற எந்த திட்டமாக இருந்தாலும் பண்டிகை காலங்களில் முதலமைச்சர் வழங்குகின்ற பொங்கல் தொகுப்பு, இயற்கை சீற்றங்களின் காலத்தில் பொதுமக்களுக்கு அரசு வழங்குகின்ற உதவிகள் எல்லாவற்றையும் கொண்டு இல்லம் தேடி கொண்டு சேர்க்கும் ஒருதுறை கூட்டுறவுத்துறை. அதுபோல் பொருளாதார வளர்சிக்கு தேவையான, அனைத்து மக்களுக்கும் தேவையான கடன்களை செய்வதே இந்த துறையின் முன்னோடியாக இருக்கிறது.

வங்கி சேவையிலும் மகத்தான சாதனைகளை இத்துறை படைத்திருக்கிறது. குறிப்பாக விவசாயிகளுக்கான கடன்களை வழங்கி, சிறு தொழில் செய்பவர்கள், மகளிர் சுயஉதவி குழுக்களை சார்ந்தவர்கள், கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள், என்று 34 வகையான பிரிவினருக்கு கூட்டுறவு துறையின் கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலமாக கடன்கள் வழங்கப்பட்டு, அவர்களுடைய பொருளாதார வளர்சிக்கும், அடித்தட்டு மக்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்துவதற்கும், கூட்டுறவு சங்கம் பயன்பட்டு வருகிறது. பொதுமக்கள் பயன்படுத்துகின்ற அத்தியாவசிய பொருட்கள் வெளி சந்தையை விட "மலிவான விலையில் தரமான பொருட்கள்" கூட்டுறவு சங்கங்களின் பண்டகசாலைகல் மூலமாக பொதுமக்களுக்கு இத்துறையின் மூலமாக கொண்டுபோய் சேர்க்கப்படுகிறது. மக்களோடு இனைந்து அன்றாட வாழ்க்கைக்கு, மக்களுக்கு தேவையான காரியங்களை செய்கின்ற துறைதான் கூட்டுறவுத்துறை.

முதலமைச்சர் முத்தாய்பாக இந்த துறைக்கு ஒரு வாய்பினை தந்தார்கள். அதுதான் "முதல்வர் மருந்தகம்".

1000 முதல்வர் மருந்தகங்களை தமிழகம் முலுவதும் தொடங்குவதற்கு வாய்ப்பினை தந்து, அதில் 500 முதல்வர் மருந்தகங்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் அதே போல் 500 மருந்தகங்கள் புதிய தொழில்முனைவோருக்கு வாய்பளிக்கின்ற வகையிலும் வழங்கப்பட்டது. அப்படி தொடங்கப்பட்ட முதல்வர் மருந்தகங்களும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்கு தேவையான இடுபொருள் இயற்கை உரம், ரசாயன உரம், போன்றவற்றையும் விவசாயிகளுக்கு கொண்டுபோய் சேர்கின்றது. கூட்டுறவுத்துறையின் மூலமாக பொது மக்களுக்கு வழங்கக் கூடிய சேவைகள் பொது மக்களுக்கு இன்னும் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற உணர்வோடு இதனுடைய செயல்பாடுகளை விளம்பரப்படுத்துகின்ற வகையில் தற்போது அரசு நகரப் பேருந்துகளில் விளம்பரப்படுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கககளுடைய கூட்டுறவு செயல்பாடுகளை எல்லாம் பொதுமக்கள் அறிந்து கொள்கின்ற வகையில் எதிர்காலத்தில் இவ்வளவு சேவைகள் இந்த துறையில் இருக்கின்றதா? என்பதனை பொது மக்கள் அறிந்து கொள்கின்ற வகையில் பேருந்துகளில் விளம்பர படுத்துவதற்கான 300 பேருந்துகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முதற்கட்டமாக நேற்று (04.06.2025) 10 பேருந்துகள் விளம்பர பதாதைகளோடு நகரில் வலம் வர தயாராக உள்ளது.

நீண்ட நெடிய வலுவான கட்டமைப்புகளை கொண்ட கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த பேருந்துகளில் செய்யப்படுகின்ற விளம்ப ரங்கள் பொது மக்களுக்கு சென்றடைந்து, இன்னும் கூடுதலான சேவைகளை செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

கேள்வி: ஒரு பேருந்துக்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகின்றது?

அமைச்சர் ஆர்.ஆர். பெரியகருப்பன்:

மாதம் ஒரு பேருந்திற்கு 12 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கேள்வி : வங்கிகளில் தங்க நகைக்கடன் வைப்பதற்கு ரிசர்வ் வங்கிகள் பல்வேறு விதிமுறைகள் வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது இதற்கு ஏதேனும் கிளைகள் ஏற்படுத்தப்படுமா?

அமைச்சர் : ஒன்றிய அரசு அறிவித்தார்கள் அது வரைவு அறிக்கைதான். அந்த வரைவு அறிக்கைக்கு நமது முதலமைச்சர் தெளிவாக நிதி அமைச்சர்க்கு கடிதம் எழுதினார்கள். இது வெகுவாக நடுத்தர மக்களை, ஏழை எளிய மக்களைபாதிக்கக்கூடிய நடவடிக்கையாக இருக்கிறது. ஆகவே இதனை திரும்ப பெற வேண்டும் என்று நானும் பத்திரிக்கையாளர்களை சந்திக்கும் போது சொல்லியிருந்தேன். வரைவுகளில் கூட சில தளர்வுகளை கொண்டு வந்தார்கள் தொடர்ந்து முதலமைச்சர் அதனை திரும்ப பெறுவதற்கு வழிவுறுத்தி கொண்டு இருக்கின்றார்கள்.

கேள்வி : வீடு தேடி பொருட்கள் (Home delivery) எவ்வாறு செயல்படும்?

அமைச்சர் : படிப்படியாக தேவைகளுக்கு ஏற்றாற்போல் நடந்துகொண்டு வருகின்றது.

கேள்வி : விளம்பர பேருந்துகள் செயல்படுத்தப்படுவது தமிழகம் முழுவதுமா? சென்னை மட்டுமா?

அமைச்சர் : முதற்கட்டமாக இப்பொழுது சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது. 1000 ஆட்டோக்களுக்கு கடன் உதவி செய்ய உள்ளோம். மகளிருக்கும் உதவிகள் செய்ய உள்ளோம். அந்த ஆட்டோக்களில் இன்னும் பல்வேறு வகையில் பேருந்து நிழற்கூடைகளில் கூட்டுறவு சங்கங்களின் சார்பாக நியமிப்பதற்கு பல்வேறு வகையில் விளம்பரங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் விரைவில் அதை செயல்படுத்துவோம் என கூறினார்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கூறினார்.

தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
PC 1108	த.பொ / க.கா & த.தொ / சென்னை	Supply, installation commissioning of 2 sets 480V 200AH VRLA battery

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tantransco.gov.in, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in/nicgep/app
செ.ம.தொ.இ/2828/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
27	மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி	AHP Unit I Overhaul 2025-26 Design engineering work to be carried out in B pass
30	மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி	AHP Dn Unit I II III Outsourcing of Operation and Maintenance of PDFAC System for a period of 60
29	மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி	AHP Unit II Overhaul 2025 26 Design engineering work to be carried out in B pass
65	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி	Various types of Solenoid Valve
58	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி	Bell Mouth Liner for Unit-I CWP
57	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி	SA 106 Gr C Seamless 600 NB and 450 NB pipes
60	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி	Oil Nozzle tip and Splitter Plate Insert Plate and Inner side
59	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி	Journal shaft for HP803 Bowl mills
61	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி	Supply of Ceramic fiber blankets and Aluminium Sheet for 210 MW KWU TG set
44	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-2	Procurement of various sizes of butterfly valve and flange

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணைய தளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app; www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb; www.tenders.tn.gov.in செ.ம.தொ.இ/2835/ஒப்பந்தப்புள்ளி/2025

பெருநகர சென்னை மாநகராட்சி
மின்துறை

மி. து. ந. க. எண். மே 2 / மி10 / 585 / 2025

மறு மின் ஒப்ப அறிவிப்பு

Supply of 2000 nos. of 2 core SMC Fuse box & 1500 nos of 4 core SMC Fuse box for regular maintenance of street lights in Zones 1 to 15

இப்பணிக்கான தோராய மதிப்பு : ரூ.**38,30,300/-** முன் வைப்புத் தொகை : ரூ. **38,303/-**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்துகொண்டு மின் ஒப்பத்தில் **20.06.2025** பிற்பகல் **02.15** மணிக்குள் பங்கேற்கலாம், **20.06.2025** பிற்பகல் **3.15** மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 2845 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர்/மின்துறை**

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (04.06.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025-26 ஆம் கல்வியாண்டிற்கான தனியார் மருத்துவக்கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீடு இடப் பங்கீட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, தேர்வுக்குழு செயலாளர் மரு.தேரணிராஜன், துணை இயக்குநர் மரு.கராமத் மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ரூ.300 கோடியில் புதிய தொழிற்சாலை! முதல்வர் தொடங்கி வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

முதலிடம் பெற்றுள்ளது. இது, கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ் நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சியாகும்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு, அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அஜைல் ரோபோட்ஸ் SE நிறுவனம்

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த அஜைல் ரோபோட்ஸ் SE நிறுவனம், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, புதிய தலைமுறை தானியங்கு தீர்வுகளை வழங்கும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், தற்போது, அனைத்துத் துறைகளுக்கும் பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தித் தொழிற்சாலையை, காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் நிறுவியுள்ளது. இத்திட்டத்தில், 300 கோடி ரூபாய் முதலீட்டில் 300 உள்ளூர் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் காற்று பிரித்தெடுக்கும் ஆலை

SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இத்தாலி நாட்டைச் சேர்ந்த SOL SpA மற்றும் இந்தியாவின் சிக்ஜில்சால் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனம் ஆகும். இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள இந்நிறுவனம், தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொண்டு வருகிறது. 2019 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, 100 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது 200 கோடி ரூபாய் முதலீடு என்ற வகையில், இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுடன் காற்று பிரித்தெடுக்கும் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் காற்று பிரித்தெடுப்பு (Air Separation) ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்களால் கடந்த 19.07.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது பணி நிறைவடைந்து, 175 கோடி ரூபாய் முதலீட்டில், காற்று பிரித்தெடுக்கும்ஆலைநிறுவப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது உறுதியளித்த முதலீடுகள் இதில் அடங்கும். 20 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு ஆலைகளும் முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, அஜைல் ரோபோட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரோரி சாக்ஸ்டன் மற்றும் இந்திய செயல்பாடுகள் மேலாண்மை இயக்குநர் சரவணன் சோலையப்பன், SOL இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் அல்டோ ஃப்யுமகல்லி ரொமாரியோ, திட்டத் தலைவர் கைலியோ லாவ் ஃப்யுமகல்லி ரொமாரியோ, SOL இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.வி.வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீதிபதிகள் ஓய்வுக்குப்பிறகு

புதிய பதவி பெறுவது - தேர்தலில் போட்டியிடுவது தவறு!

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் பேச்சு!

லண்டன், ஜூன் 5 -

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெறுவது மற்றும் தேர்தலில் போட்டியிடுவது தார்மீக அடிப்படையில் தவறு என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கவாய் தெரிவித்துள்ளார்.

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசின் பல்வேறு பதவிகளில் நியமிக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது. இந்நிலையில், நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெறுவது, தேர்தலில் போட்டியிடுவது தார்மீக அடிப்படையில் தவறு என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேசை ஆலோசனை கூட்டத்தில் உரையாற்றிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெற்றால், நீதித் துறை மீதான மக்களின் நம்பிக்கை சிதைந்து விடும் என்றும் கவலை தெரிவித்தார்.

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசின் பல்வேறு பதவிகளில் நியமிக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் கொள்ளுமேடு அரசினர் பள்ளி வளாகத்தில்

20 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் - பசுமைச் சூழலோடு தரம் உயர்த்தப்பட்ட பசுமைப் பள்ளி!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார் !

திருவள்ளூர் ஜீன் 05;

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் கொள்ளுமேடு அரசினர் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை சார்பாக ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளியின் உட்கட்டமைப்புகள் பசுமை சூழலோடு தரம் உயர்த்தப்பட்ட பசுமைப் பள்ளியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தொடங்கி வைத்து பார்வையிட்டார் .

பின்னர் அமைச்சர் தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை சார்பாக மாநிலம் முழுவதும் 3 கட்டங்களாக பசுமை பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளியின் உட்கட்டமைப்புகள் பசுமை சூழலோடு தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.அதன் ஒரு பகுதியாக திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம், கொள்ளுமேடு அரசினர் உயர் நிலைப் பள்ளி மாவட்டத்தின் முதல் பசுமை பள்ளியாக தேர்வு செய்யப்பட்டது. போதிய அடிப்படை வசதியின்றி இருந்த இப்பள்ளி பசுமை திட்ட நிதியோடு மாவட்ட ஆட்சியரின் சீரிய முயற்சினால் , சானிடேஷன் பர்ஸ்ட் தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தற்போது மேம்படுத்தப்பட்ட பசுமை பள்ளியாக உருவெடுத்து இத்திட்டத்தின்படி பள்ளியில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு, நீர் தேக்க தொட்டி, சூரிய மின் சக்தி தகடுகள், காய்கறி தோட்டம், மூலிகை தோட்டம் மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு அமைப்புகள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் சானிடேஷன் பர்ஸ்ட் தொண்டு நிறுவனம் சார்பாக பள்ளி வளாகம் முழுவதும் மாட்டு சாணத்தால் உருவாக்கப்பட்ட பிரக்ருதி வண்ணப்பூச்சு, பள்ளி வளாகம் முழுவதும் பாதுகாப்பு இரும்பு வேலி, சூரிய மின் சக்தியை மேம்படுத்த சூரிய ஒளி எதிரொளிப்பு வண்ணப்பூச்சு (Solar reflectance Index)மாணவிகளின் சுகாதார மேம்பாட்டிற்காக சானிடரி நாப்கின் எரியூட்டி (Incinerator). இத்துடன் நமது மாவட்டத்தின் சிறப்புகளை பிரதிபலிக்கும் வகையில்,ஆதிமனிதன் வாழ்ந்த குடியம் குகை, பழவேற்காடு ஏரி மற்றும் வலசை பறவைகள் சார்ந்த அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு பசுமை பள்ளியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 10 விழிப்புணர்வு அமர்வுகள் பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களால் வழங்கப்பட்டது.

கார்பன் வெளியீட்டு அளவினை கட்டுப்படுத்தி நிகர பூஜ்ய நிலைக்கு கொண்டு செல்வது, மாணவர்களிடம் பசுமை சார்ந்த சிந்தனையை மேம்படுத்துவது, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போன்றவை இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். மேலும், மூன்றாம் கட்ட பசுமை பள்ளி திட்டத்தில் சுந்தரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருமழிசைஅரசினர் மேல்நிலைப்பள்ளி, குத்தம்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருக்கண்டலம் ஆகிய மூன்று பள்ளிகள் தேர்வாகி உள்ளன. மேற்கண்ட பள்ளிகள் இவ்வாண்டிற்குள் மேம்படுத்தப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வர உள்ளது என அமைச்சர் சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் தலைமையில், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், மாவட்ட வன அலுவலர் சுப்பையா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கோமதி, வேளாண் செயற் பொறியாளர் சரவணன் மாவட்ட பசுமை தோழர். முனைவர்.சுருதி மற்றும் பல்வேறு துறைசார்ந்த அலுவலர்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர் .

முதலமைச்சர் அவர்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு இக்கல்வியாண்டுக்கான விலையில்லா புத்தகப் பை, புத்தகங்கள், நோட்டுகள் உள்ளிட்ட கல்விச் சாதனப் பொருட்களை வழங்கும் நிகழ்வைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண்.61, எழும்பூர், வரதராஜபுரத்திலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளி, வார்டு எண்.99, புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் கோவில் தெருவில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, ஷெனாய் நகர் சுப்பராயன் தெருவில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் வார்டு எண்.61, எழும்பூரிலுள்ள அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நடந்த விலையில்லா கல்விச் சாதனைங்கள் வழங்கும் நிகழ்ச்சிகளில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, புத்தகப் பை, புத்தகங்கள், நோட்டுகள் உள்ளிட்டவற்றை மாணவ-மாணவிகளுக்கு வழங்கினார்.

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று ஒரு லட்சம் பட்டாக்கள் வழங்கிய நிலையில் அதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பழையனூர், தொழுதாவூர், வியாசபுரம், மணவூர், ஒரத்தூர், சின்ன மண்டலி, பெரிய களக்காட்டூர் ஆகிய கிராமங்களை சார்ந்த 138 நபர்களுக்கு வீட்டு மனை பட்டாக்களை சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன் வழங்கினார். நிகழ்ச்சியில் திருத்தணி வட்டாட்சியர், ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம். பன்னீர்செல்வம் , ஒன்றிய கழக நிர்வாகிகள் ரமேஷ், சண்முகம் நீலாவதி சீனிவாசன்,டி. தினகரன், ஏ. பி. செந்தில்குமார், ஜி. கே. பன்னீர்செல்வம், வி ஜெகதீசன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வழக்கறிஞர் டேனியல் முனிகிருஷ்ணன், மற்றும் பயனாளிகள் பங்கேற்றனர்.